முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

# (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

(Information Systems in Digital Environment)

2021-10-24
காலை
[08.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** தகவல்கள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க:

(1) பேறுகளைப் (results) பெறுவதற்கான உள்ளீடுகளாகப் பணியாற்ற, தகவல்களைப் பயன்படுத்த முடியும்.

(2) தகவல்கள் அதன் தன்மையைப் பொறுத்தளவில் திட்டவட்டமானவையாக இருக்காது.

(3) தகவல்கள், தரவுகளிலிருந்து உருவாக்கப்படுகின்றன.

(4) தகவல்களை அளவிட முடியாது.

**1.2** மாணவன் ஒருவன் இணைய இணைப்புடன்கூடிய அன்ராயிட் இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்ட திறன்பேசி (smartphone) ஒன்றினை வாங்குவதற்குத் திட்டமிடுகிறான். இந்த விடயம் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

**(a)** மின்னஞ்சல்களை அனுப்புதலும் பெறுதலும்

**(b)** யூ ரியுப் காணொளிகளைப் (YouTube videos) பார்வையிடல்

**(c)** வெளிநாட்டிலுள்ள உறவினர்களுடன் உரையாடுதலும் குறுஞ்செய்திகளைப் பரிமாறுதலும்

**(d)** பயணத்திற்காக வண்டியொன்றை முன்பதிவு செய்தல்.

மேலுள்ளவற்றிலிருந்து திறன்பேசியைப் பயன்படுத்தி ஆற்றப்படக்கூடிய சாத்தியமான நடவடிக்கை களைத் தெரிவு செய்க :

(1) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

(2) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்

(4) மேலுள்ள அனைத்தும்.

**1.3** கணக்காளர் ஒருவர் கம்பனி ஒன்றிற்கு இணைய இணைப்பினைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடுகிறார். உலகளாவிய சூழலில் கிடைக்கக்கூடிய கீழ்வரும் இணைய இணைப்புத் தொழில்நுட்பங்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

**(a)** Optical Fibre.

**(b)** Asymmetric Digital Subscriber Line.

**(c)** 6G.

**(d)** 4G LTE.

மேலுள்ளவற்றுள் இலங்கையில் கிடைக்கக்கூடிய இணைய இணைப்புத் தொழில்நுட்பங்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(2) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்

(4) மேலுள்ள அனைத்தும்.

**1.4** விற்பனை முகாமைத்துவ முறைமைகள், பாதீட்டு முறைமைகள் மற்றும் மனித வள முகாமைத்துவ முறைமைகள் என்பன பின்வருவனவற்றுள் எந்த முறைமைகளுக்கான உதாரணங்களாகும்?

(1) கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் (transaction processing) முறைமைகள்

(2) தீர்மான ஆதரவு (decision support) முறைமைகள்

(3) நிறைவேற்றுத் தகவல் (executive information) முறைமைகள்

(4) முகாமைத்துவத் தகவல் (management information) முறைமைகள்

**1.5** கீழ்வருவனவற்றுள் வணிக நிபுணத்துவ முறைமையை நடைமுறைப்படுத்தத் தேவையானது எது?

(1) நிதிசார் கணக்காய்வு அம்சங்கள்

(2) செயற்கை நுண்ணறிவு நுட்பங்கள்

(3) தரவுக் குறியாக்கம் (Data Encryption)

(4) சமூக ஊடகங்களுடன் இணைக்கப்பட்ட முறைமைகள்

**1.6** சிறப்பங்காடி ஒன்று இலங்கையில் உள்ள அதன் சிறப்பங்காடி வலையமைப்பினுள் வாடிக்கையாளர் விசுவாச அட்டையைப் பயன்படுத்துகின்ற 1 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளை வைத்திருக்கிறது.

மேற்படி விடயம் தொடர்பான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

**(a)** தரவு காட்சிப்படுத்தல் கருவிகள்

**(b)** உள்ளகக் கணக்காய்வுத் தளங்கள்

**(c)** பெருந் தரவுத் தளங்கள்

**(d)** அலுவலக தன்னியக்கக் கருவிகள்

மேலுள்ளவற்றிலிருந்து, வாடிக்கையாளர்களின் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு நிறுவனம் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் / கருவிகளைத் தெரிவு செய்க :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்

(4) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்

**1.7** கோவிட் 19 நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் வீட்டிலிருந்து பணியாற்றிய ஊழியர் ஒருவருக்கு, அவரது மின்னஞ்சலின் பயனர் பெயர் (user name) மற்றும் கடவுச்சொல்லைச் (password) சரிபார்க்குமாறு கூறி, அவரது அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் ஒன்று கிடைக்கப் பெற்றது. எவ்வாறாயினும், அவருக்கு வந்த மின்னஞ்சலை அனுப்பியவரது URL அவரது கம்பனியின் URL இலிருந்து வேறுபட்டிருந்ததை அவர் அவதானித்தார். இந்த வகை அச்சுறுத்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) Backdoor access.

(2) Spyware.

(3) Phishing.

(4) Denial of service.

**1.8** நிதிக் கம்பனி ஒன்றிற்காக உள்ளக ரீதியாக விருத்தி செய்யப்பட்ட ஒரு கணினி நிகழ்ச்சித் திட்டத்தை அந்தக் கம்பனியின் முன்னாள் ஊழியர் ஒருவர் திருடி, தானே சொந்தமாக விருத்திசெய்த நிகழ்ச்சித்திட்டம் எனக் கூறி, பிறிதொரு கம்பனிக்கு விற்பனை செய்திருந்தார். கீழ்வரும் எந்தச் சட்டத்தின் கீழ், அந்த முன்னாள் ஊழியருக்கு எதிராக கம்பனியால் வழக்குத் தொடுக்க முடியும்?

(1) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்

(2) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைச் சட்டம்

(3) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டம்

(4) 2017 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனை (திருத்தச்) சட்டம்

**1.9** கோவிட் 19 நோய்த் தொற்றுப் பரவல் காலத்தில், தமது நாளாந்தப் பணிகளை முன்னெடுக்கும் போது, கோவிட் 19 வைரஸ் பரவல் அபாயத்தைக் குறைப்பதற்காக புத்தாக்கமான பொருள்களைப் பயன்படுத்துவதற்கு பல கம்பனிகள் தீர்மானித்திருந்தன. “Lanka QR” என்பது இந்த நோக்கத்திற்கு உதவக்கூடிய இலங்கை மத்திய வங்கியின் ஒரு செயற்றிட்ட முயற்சியாகும். இந்த அம்சத்தில், “Lanka QR” இனால் ஆற்றப்படும் தொழிற்பாடு (function) :

(1) இலங்கையில் பயன்படுத்தப்படும் குறியீட்டு நாணயம் ஒன்றாகச் செயற்படுதல்.

(2) அனைத்து QR குறியீடுகளும் QR அடிப்படையிலமைந்த பரிவர்த்தனைகளும் நியமப்படுத்தப் படுவதை உறுதிப்படுத்தல்.

(3) நபர் ஒருவரின் தேசிய ஆளடையாள அட்டையை (NIC) இனங்காணல்.

(4) பல தரவு மூலங்களுக்கிடையில் தரவுகளைப் பகிர்தலும் பதிவு செய்தலும்.

**1.10** “Kickstarter” மற்றும் “Indiegogo” என்பன பின்வருவனவற்றுள் எதற்கான உதாரணங்களாகும்?

(1) குறியீட்டு நாணயம்

(2) குறியாக்க நெறிமுறைகள்

(3) கூட்டு நிதியிடல் தளங்கள்

(4) கொடுப்பனவு நுழைவாயில்கள்

(02 புள்ளிகள் வீதம், 20 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.11** உள்ளீடு, செயன்முறை மற்றும் வெளியீடு என்பன தகவல் முறைமையொன்றின் அடிப்படைக் கூறுகள் (components) ஆகும்.

**1.12** தகவல் முறைமைகளுடன் தொடர்புடைய "CRM" என்பது "Customer Relationship Matching" என்பதன் சுருக்கக் குறியீடாகும்.

**1.13** தரவுச் சுரங்கம் (Data mining) என்பது மோசடிகளைக் கண்டுபிடிப்பதற்காக கடன் அட்டை சேவைப் புலத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**1.14** சமூக ஊடகத்தைப் பயன்படுத்துவதன் ஒரு அனுகூலம் என்னவெனில், ஒருவர் சமூக ஊடகத்தில் அடையாளத் திருட்டை மேற்கொள்ள முடியாமை ஆகும்.

**1.15** நுண்காசு (Bitcoin) என்பது பிரசித்திபெற்ற குறியீட்டு நாணயமொன்றுக்கான (cryptocurrency) ஓர் உதாரணமாகும்.. (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## **<u>பகுதி B</u>**

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

தகவல் தொழில்நுட்பம் என்பது ஒவ்வொரு வணிக நிறுவனத்தினதும் முக்கியமானதும் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாகவும் மாறி வருகிறது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் முறைமை ஆகியவற்றின் வளர்ச்சி, வணிக நிறுவனங்களில் பல்வேறு வகைகளில் தாக்கம் செலுத்துகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தகவல் தொழில்நுட்பமும் தகவல் முறைமைகளும் வணிக நிறுவனங்களின் செயற்பாட்டில் தாக்கம் செலுத்தும் மூன்று (03) வழிகளை (ways) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) "தகவல் முறைமைகளை இணையம் வாயிலாக இலவசமாக தரவிறக்கம் செய்யக்கூடியதாக இருப்பதன் காரணமாக அவை தற்போது முதன்மையாக பிரபல்யம் அடைந்துள்ளன.''

இந்தக் கூற்றுடன் நீங்கள் இணங்குகிறீர்களா என்பதை, பொருத்தமான நியாயப்படுத்தல்களுடன் **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(c) கல்வி நிறுவகம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற பரீட்சைச் செயன்முறையானது மாணவர் பதிவு, பரீட்சைக்கான கொடுப்பனவுகள், அனுமதி அட்டை விநியோகம், பெறுபேறுகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

பரீட்சைச் செயன்முறையின் பயனுறுதித்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு ICT ஐ எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

கோவிட் 19 நோய்த் தொற்றுப் பரவல் காரணமாக, பெரும்பாலான பாடசாலைகளும் உயர் கல்வி நிறுவகங்களும் நிகழ்நிலை வகுப்புகளை (Online classes) நடத்துகின்றன. மாணவி ஒருவர் தனது நிகழ்நிலை வகுப்புகளுக்காகப் பயன்படுத்தவென மடிக் கணினி (laptop computer) ஒன்றினை வாங்குவதற்குத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தற்காலத்தில் வாங்கப்படும் ஒரு புதிய மடிக் கணினியில் காணப்படக்கூடிய இயங்குதள முறைமைகளின் (operating systems) இரண்டு (02) வகைகளைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(b) அவர் தனது சகல ஒப்படைக் கோப்புகளையும் (assignment files) மடிக் கணினியில் உள்ள வன் தட்டில் (hard drive) சேமிப்பதற்குத் திட்டமிட்டுள்ளார். ஆனால் அவரது நண்பி ஒருவர் Google Drive இனை அல்லது One Drive இனைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்துள்ளார்.

Google Drive அல்லது One Drive இற்கு பதிலாக வன் தட்டைப் (hard drive) பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய இரண்டு (02) அனுகூலங்களையும் இரண்டு (02) பிரதிகூலங்களையும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) மாணவன் ஒருவன் 4G இணைய இணைப்பு கொண்ட திறன்பேசி (smart phone) ஒன்றினை வைத்திருப்பதாகக் கருதுக.

திறன்பேசியின் மூலம் மாணவன் எவ்வாறு இணையத்தை அணுக முடியும் என்பதை **விபரிக்குக.** *(ஏதாவது எடுகோள்கள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக).* (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

***லங்கா கார்மென்ட்ஸ்*** என்பது இலங்கையில் 15 தொழிற்சாலைகளுடன் இயங்குகின்ற ஒரு ஆடைத் தயாரிப்பு நிறுவனமாகும். இலங்கையில் தயாரிக்கப்படும் ஆடைகள், **அமெரிக்காவின் சாரா குளோத்திங் கம்பனியினால்** கொள்வனவு செய்யப்பட்டு, கம்பனியின் இணையத்தளம் ஊடாக நிகழ்நிலையிலும் (online) அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய இடங்களிலுள்ள அவர்களின் மரபார்ந்த கடைகளின் (traditional stores) ஊடாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. **லங்கா கார்மென்ட்ஸ்** இன் தலைமை அலுவலகம் பிலியந்தலையில் அமைந்துள்ளதுடன், **அமெரிக்காவின் சாரா குளோத்திங் கம்பனியுடன்** செய்து கொள்ளப்பட்ட புலமைச் சொத்து உடன்படிக்கை காரணமாக தங்களது தயாரிப்புகளை உள்நாட்டில் விற்பனை செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை. **லங்கா கார்மென்ட்ஸ்** இனால் ஆடைகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்ற துணிகளும் ஏனைய பொருள்களும் சீனாவில் உள்ள அவர்களது வழங்குநர்களிடமிருந்து பெறப்படுகின்றன. இக்கம்பனியின் 15 தொழிற்சாலைகளிலும் மொத்தமாக 3,300 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**லங்கா கார்மென்ட்ஸ்** இற்குத் தேவைப்படக்கூடிய தகவல் முறைமைகள் / தொகுதிகளின் ஐந்து (05) வகைகளை **விபரிக்குக.** *(ஒவ்வொரு தகவல் முறைமைக்குமான தேவை தெளிவாக நியாயப்படுத்தப்பட வேண்டும்).* (10 புள்ளிகள்)

## வினா 05

திறன்பேசிகளைப் பயன்படுத்தும் இளையோர் மற்றும் பெரியோர் மத்தியில் குறிப்பாக சமூக வலைத்தளங்கள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவையாக இருக்கின்றன. பயனர்கள் (users) தங்களது கருத்துக்கள், டிஜிடல் ஒளிப்படங்கள் மற்றும் காணொளிகள், பதிவுகள் போன்றவற்றைப் பகிர்வதற்கு சமூக வலைத்தளங்கள் இடமளிக்கின்றன. எவ்வாறாயினும், சமூக வலைத்தளக் கணக்குகள் பிறரால் ஊடுருவலுக்கு உள்ளாகக்கூடிய சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தற்போது பயன்பாட்டில் உள்ள சமூக வலைத்தளங்கள் நான்கினைப் (04) **பட்டியலிடுக.**

(04 புள்ளிகள்)

(b) சட்டவிரோத அணுகலுக்கு எதிராக தமது சமூக வலைத்தளக் கணக்குகளை வலுப்படுத்துவதற்கு பயனர்களால் எடுக்கப்படக்கூடிய இரண்டு (02) சாத்தியமான நடவடிக்கைகளை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(c) தனிநபர்கள் மற்றும் சமூகத்தின் மீது சமூக ஊடகங்களும் வலைத்தளங்களும் ஏற்படுத்துகின்ற இரண்டு (02) எதிர்மறையான (negative) தாக்கங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(a) MOOC என்பது இலத்திரனியல் கற்றலின் (E-learning) ஒரு புதிய போக்காகக் காணப்படுவதுடன் கற்பதற்கும், அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் அதே போன்று செல்லுபடியான சான்றினைப் வழங்குவதற்கும் இது ஒரு சாத்தியமான வழிமுறையாகவும் இருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) MOOC எனும் பதத்தினை அதன் இரண்டு (02) பண்புகளுடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(ii) "MOOC" சேவையை வழங்குகின்ற இரண்டு (02) கல்வி இணையத்தளங்களின் (educational sites) பெயர்களை **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(b) "FinTech" ஆனது நிறுவனங்கள் மீது தாக்கம் செலுத்தும் இரண்டு (02) வழிகளை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**லங்கா ஹெல்த்** என்பது இலங்கையின் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் 20 வருட கால சிறப்பான வரலாற்றைக் கொண்ட வைத்தியசாலைக் குழுமம் ஆகும். இது கொழும்பு, கண்டி, குருநாகல், காலி மற்றும் அநுராதபுரம் என ஐந்து இடங்களில் வைத்தியசாலைகளைக் கொண்டுள்ளது. **லங்கா ஹெல்த் குழுமத்தின்** கீழ் இயங்குகின்ற **லங்கா ஹெல்த் ஆய்வுகூடங்கள்** நாடுபூராகவும் 10 இடங்களில் நோய்நிருணயச் சோதனைகளை (diagnostic testing) நடத்துகின்றன. குழுமத்தின் 70 சேகரிப்பு நிலையங்களைக் கொண்ட வலையமைப்பானது மாதிரிகளை வினைத்திறனான முறையில் சேகரிப்பதற்கு உதவுவதுடன் இது நாள் ஒன்றுக்கு நடத்தப்படுகின்ற சோதனைகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக ஆக்கியுள்ளது *(ஏறத்தாழ நாளொன்றுக்கு 15,000 சோதனைகள்)*.

**லங்கா ஹெல்த்** இன் நோக்கமானது தெற்காசியாவில் முன்னணி சுகாதார சேவை வழங்குநராக விளங்குவதாகும். இது இலங்கையை ஆரோக்கியம் மிகுந்த சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்காக தங்களுடைய சேவைகளை மேலும் விரிவாக்குவதற்கும் திட்டமிடுகிறது. **லங்கா ஹெல்த்** இனால் வழங்கப்பட்ட சிறப்பான சேவைகளுக்காக குறிப்பாக மருத்துவ ஆய்வுகூடங்களுக்கான உலகளாவிய சான்றிதழான ISO 15189:2007, தர முகாமைத்துவ முறைமைச் சான்றிதழான ISO 9001:2008 மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவ முறைமைச் சான்றிதழான ISO 14001:2004 போன்ற முன்னணி சுகாதார அங்கீகாரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அண்மையில், தரம் மற்றும் நோயாளர் பாதுகாப்புக்கான தங்க முத்திரையுடன்கூடிய JCI (சர்வதேச கூட்டு ஆணைக்குழு) அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

**லங்கா ஹெல்த்தின்** இடைக்கால இலக்குகளாக இருப்பவை, தங்களுடைய வாடிக்கையாளர்கள் நோய் நிருணய அறிக்கைகள் தொடர்பில் வினைத்திறனான சேவையைப் பெற்றுக்கொள்வதையும் நோயாளர்களின் நிகழ் நேர பதிவுகளுடன் தமது மருத்துவ ஆலோசகர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதையும் உறுதிப்படுத்துவதாகும். மேலும், **லங்கா ஹெல்த்** ஆனது காகிதப் பாவனையற்ற ''பசுமையான'' வைத்தியசாலையொன்றாக இருப்பதற்கும் விரும்புகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **லங்கா ஹெல்த்** ஆனது காகிதப் பாவனையற்ற வைத்தியசாலை என்ற இலக்கை அடைவதற்கு பின்பற்றக்கூடிய சாத்தியமான IT தந்திரோபாயம் (strategy) ஒன்றினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நோயாளர்களின் ஆரோக்கியம் தொடர்பான தீர்மானங்களை தெரிவிப்பதற்கு ''நிகழ் நேர நோயாளர் பதிவுகள் மருத்துவ ஆலோசகர்களுக்கு உதவி புரியும்''.

இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக கம்பனி பின்பற்றக்கூடிய சாத்தியமான IT தந்திரோபாயம் ஒன்றினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) மேலே (a) மற்றும் (b) இல் குறிப்பிடப்பட்ட தந்திரோபாங்களை அடைந்து கொள்வதற்கு கம்பனி முதலீடு செய்ய வேண்டிய IT உட்கட்டமைப்பின் நான்கு (04) கூறுகளை (components) **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(d) **லங்கா ஹெல்த்திற்கான** கையடக்கத் தொலைபேசிச் செயலி ஒன்றினை விருத்தி செய்யும்போது, கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நான்கு (04) சாத்தியமான பிரயோகங்களை (applications) **விபரிக்குக.** *(ஏதாவது எடுகோள்கள் இருப்பின் அவற்றையும் குறிப்பிடுக)*. (08 புள்ளிகள்)

(e) **லங்கா ஹெல்த்திற்கென** தரவுத்தளம் ஒன்றைத் தெரிவு செய்யும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய மூன்று (03) பிரதான காரணிகளை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |